# சொல்லால் எல்லாம் செய்தவனே

சொல்லால் எல்லாம் செய்தவனே   எல்லாம் தந்தோமே
வாழ்வால் எல்லாம் சொன்னவனே   தாழ்வாய்த் தந்தோமே
போற்றுவோம் இறைவா வாழ்த்துவோம் தலைவா

1
பல்வகைப் பொருளும்  பண்பட்ட உள்ளமும்
நன்றியாய்க் கொண்டு வந்தோம்
எம் நிறை வாழ்வும் அது தரும் பயனும்
மகிழ்வாயும் பாதம் தந்தோம் உழைப்பும் களைப்பும் தந்தோமே
உவகை இன்பம் கொண்டோமே ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
மலர வைப்பாய் கனி கொடுப்பாய்

2
முன்னால் வேதனை பின்னால் சோதனை
இந்நாள் கொண்டு வந்தோம்
உந்நாள் சாதனை உன் மொழி போதனை
பொன்னார் பாதம் வைத்தோம் கலக்கம் தயக்கம் கொண்டோமே
களிப்பு செழிப்பு தந்தோமே ஏற்றிடுவாய் மாற்றிடுவாய்
மலர வைப்பாய் கனி கொடுப்பாய்